# இன்றைய வேளாண் செய்திகள்

## 12.09.2012 P.M
## 13.09.2012 A.M

13th 2012 Sep A.M

**சிறிய ரக கருணைக்கிழங்கு செழித்துவளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதியில் சாகுபடி செய்துள்ள சிறிய ரக கருணைக்கிழங்கு பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதி விவசாயிகள் சிலர் கருணைகிழங்கு சாகுபடி செய்து கனிசமாக லாபம் ஈட்டி வருகின்றனர். குறைந்த பரப்பில் சாகுபடி செய்யும் இவ்வகை கிழங்கில் சிறியது, பெரியது என்று இரு ரகங்கள் உள்ளன. இதில் சிறிய ரக கிழங்கு ருசி அதிகம் என்பதால் மக்கள் விரும்புகின்றனர்.அதேபோல் கருணை கிழங்குகளை பலமாதங்கள் வரை தக்க பாதுகாப்புடன் வைத்திருந்து சமையலுக்கு பயன்படுத்தமுடியும். இதனால் நல்ல விலை கிடைக்கும்போது விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். கருணை கிழங்கு சாகுபடிக்கு நிலத்தை நன்கு உழுது சாண எரு தூவப்படுகிறது. பின்னர் கிழங்கின் ஒரு பகுதியை வெட்டி மண்ணில் நடவு செய்யப்படுகிறது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன் நடப்பட்ட கிழங்கில் இருந்து செடிகள் நன்கு செழித்து வளர்ந்துள்ளது.கடந்த சில தினங்களாக பெய்த மழையால் செடிகள் பசுமையாக காட்சியளிக்கிறது. கிழங்கு நன்கு வளர தேவையான உரங்களை தூவி பராமரித்து வருகின்றனர். இப்பயிர்களை அதிகம் பூச்சுகள் தாக்குவதில்லை என்பதால் பராமரிப்பு செலவு குறைவாகும். வியாபாரிகள் நேரடியாக வந்து கொள்முதல் செய்துகொள்வதால் சிரமமின்றி லாபம் ஈட்ட சிறந்த பயிராக கருணைகிழங்கு உள்ளது. இதனால் கருணை கிழங்கு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

13th 2012 Sep A.M

## வேளாண் கூட்டுறவு சங்கத்தில் 2,000 மூட்டை மஞ்சள் ஏலம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 2,000 மூட்டைகள் ஏலம் போனது.

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை, நாமகிரிப்பேட்டையில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில், செவ்வாய் தோறும் நடத்தப்படும் ஏலம், இரண்டு வாரங்களாக நிறுத்தப்பட்டது. ஏலம் நடக்காததால், மஞ்சள் மூட்டைகள் தேக்கம் அடைந்தது. இந்நிலையில், நாமக்கல் கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் முத்துக்குமாரசாமி, சங்க தனி அலுவலர் மனோன்மணி, செயலாளர் மணிவண்ணன் ஆகியோர் முன்னிலையில், நேற்று ஏலம் நடந்தது. இரண்டு வாரமாக தேங்கி இருந்த, 2,000 மஞ்சள் மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது.

நாமகிரிப்பேட்டை, ஆத்தூர், கெங்கவல்லி, தெடாவூர், துறையூர், உப்பிலியாபுரம், பெரம்பலூர், வீரகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வந்தவர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 6,000 முதல், 7,600 வரையும், உருண்டை மஞ்சள் குவிண்டாலுக்கு, 5,000 முதல், 6,300 ரூபாய் வரை விலை போனது.

13th 2012 Sep A.M

## தர்மபுரியில் சூரியகாந்தி சாகுபடி பரப்பு சரிவு

தர்மபுரி: உரிய விலை கிடைக்காததால், தர்மபுரி மாவட்டத்தில், சூரியகாந்தி சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.

தமிழக அளவில் சூரியகாந்தி மானாவாரி, இறைவை சாகுபடிகளில் ஆண்டுக்கு, ஒன்பது ஆயிரத்து, 245 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் முக்கிய பங்கு வகிக்கும் வகையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரை தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளில், ஆயிரத்து, 100 ஹெக்டர் பரப்பளவில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டது.போதிய சந்தை வசதி மற்றும் விலையின்மை, கூலியாட்கள் பற்றாக்குறை, உரவிலை உயர்வு உள்ளிட்ட, காரணங்களால் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த, விவசாயிகள் சூரியகாந்தி சாகுபடியை படிப்படியாக, குறைக்க துவங்கினர். இதனால், மாவட்டம் முழுவதும், 500 ஹெக்டேர் முதல், 600 ஹெக்டேர் வரை மட்டுமே தற்போது, சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

## 13th 2012 Sep A.M — விவசாயிகள் சங்க பொதுக்கூட்டம்

கிருஷ்ணகிரி: போச்சம்பள்ளி அடுத்த சந்தூரில், தமிழக விவசாயிகள் சங்க செயல் விளக்க பொதுக்கூட்டம் நடந்தது.
சந்தூர் கிளை தலைவர் கண்ணையா தலைமை வகித்தார். செயலாளர் கோகுல் முன்னிலை வகித்தார். மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் தீர்மானங்கள் குறித்து பேசினார். "தமிழக மின்வாரிய தடுப்புப்படை என கூறி கொண்டு ஆங்காங்கே சோதனை என்ற பெயரில் விவசாயிகளை மிரட்டி அபராத தெகை வசூலிப்பதை மின்வாரியம் கைவிடவேண்டும். விவசாயிகளின் விளை பொருட்களின் நஷ்டத்தை போக்க நெல் கரும்பு, மஞ்சள், பருத்தி போன்றவைக்கு அரசு குறைந்த விலை நிர்ணியிக்கின்றதை போல் மாவுக்கும் அரசு குறைந்த விலை நிர்ணயிக்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.மாவட்ட பொது செயலாளர் சுந்தரேசன், மாவட்ட நிர்வாகிகள் தேவேந்திரன், திருப்பதி, வெங்கடேசன், ராஜேந்திரன். பெருமாள், ராஜா, பெருமா, மணிமேகலை, நசீர் அகமது ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## 13th 2012 Sep A.M — மஞ்சள் நிர்ணய மாநாடு நடத்தியும் பயனில்லை!

ஈரோடு: விவசாய விளைபொருளுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று, முதல்கட்டமாக ஈரோட்டில் நடத்திய மஞ்சள் விலை நிர்ணய மாநாடு விவசாயிகளுக்கு எந்த பயனும் இல்லை என விவசாயிகள் குமுறுகின்றனர்.மஞ்சள் விளைச்சல் இரட்டிப்பால், தேக்கம் அதிகரித்து, சென்றாண்டை விடை, நடப்பாண்டு கடும் வீழ்ச்சிக்கு சென்ற மஞ்சள் விலையால், விவசாயிகள் பலரும் நஷ்டம் அடைந்தனர். 2010ம் ஆண்டில் தங்கத்துக்கு நிகராக இருந்த மஞ்சள் விலை, கடந்த ஏப்ரல் மாதம் வரை, குவிண்டால், 3,000 ரூபாய்க்கு விற்பனையானது.விவசாயிகளின் பல்வேறு போராட்டங்களுக்கு பின், கடந்த ஜூன், 27ம் தேதி, மாநில அரசு, கடுமையான நிபந்தனை விதித்து, "டான்பெட்' மூலம், மஞ்சள் குவிண்டாலுக்கு, 4,000 ரூபாய், விலை நிர்ணயம் செய்து, கொள்முதல் செய்ய உத்தரவிட்டது. அதன்படி, ஈரோடு, கோபி, சத்தி உள்ளிட்ட பகுதியில் தமிழ்நாடு விற்பனை கூட்டுறவு இணையம் மூலம், 28ம் தேதி துவங்கி, 30ம் தேதி வரை கொள்முதல் செய்யப்பட்டது.இதனால், வீழ்ச்சியடைந்த மஞ்சள் விலை, வெளிமார்க்கெட்டில் அதிகரிக்க துவங்கியது. கடும் நிபந்தனை, உற்பத்தி செலவுக்கு போதிய விலை இன்றி, விவசாயிகள் அரசு விற்பனை மையத்தில் ஒரு குவிண்டால் கூட விற்பனை செய்ய ஆர்வம் காட்டவில்லை. ஒட்டுமொத்த விவசாயிகளும் வெளிமார்க்கெட்டை நாடினர். மேலும், ஜூலை, 31ம் தேதி வரை கொள்முதல் செய்ய கால நீட்டிப்பு செய்தும் அரசு விற்பனை மையத்தில்

விற்பனை இல்லை.அகில இந்திய மஞ்சள் விவசாயிகள் கவுன்சில் சார்பில், விவசாய விளைபொருளுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்ய முடிவு செய்து, கடந்த, 25ம் தேதி, ஈரோட்டில் மஞ்சள் விலை நிர்ணய மாநாடு நடத்தப்பட்டது. இதில், மஞ்சள் குவிண்டாலுக்கு, 9,000 ரூபாய் என விலை நிர்ணயம் செய்தனர். மாநாடுக்கு பின், மஞ்சள் விலை ஒரு மாற்றத்தை உருவாக்கும் என விவசாய சங்க தலைவர்கள் தெரிவித்தனர்.ஆனால், இதுவரை, எந்த மாற்றமும் இல்லாமல், விலையை எதிர்பார்த்த விவசாயிகளுக்கு ஏமாற்றாமே மிஞ்சியது. தற்போது, மஞ்சள் குவிண்டால், 5,369 ரூபாய் முதல், அதிகபட்சம், 6,289 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மாநாட்டை யொட்டி, வீட்டில் இருப்பு வைத்தவர்களும், வேறுவழியின்றி, தற்போது விற்பனை செய்து வருகின்றனர் என விவசாயிகள் ஆதங்கத்தை வெளிபடுத்துகின்றனர்.

13th 2012 Sep A.M

## அமராவதி ஆற்றில் குடிநீர் எடுக்க ரூ.14 கோடியில் திட்டம்!

தாராபுரம்: தாராபுரம் நகராட்சியில் குடிநீர்ப் பணிக்காக, 14 கோடி ரூபாய் மதிப்பில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பருவமழை பெய்தபோது அமராவதி ஆற்றில் தொடர் நீரோட்டம் இருந்தது. அமராவதி பழைய, புது ஆயக்கட்டு பாசன விவசாயிகள் மூன்று போக சாகுபடி செய்தனர். தலைமை நீரேற்று நிலையம் மூலம் தாராபுரம் நகராட்சியின், 30 வார்டு மக்களுக்கு சீரான குடிநீர் வினியோகம் பெற்றனர். கடந்த, 15 ஆண்டாக, பருவ மழை பொய்த்து, ஆற்றில் தொடர் நீரோட்டம் தடைபட்டது. கேரளாவில் மழை பெய்தால் மட்டுமே தண்ணீர் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மூன்று போக சாகுபடி மாறி ஒரு போகமாகியது. ஆழ்குழாய் கிணறுகளில் நிலத்தடி நீர் குறைந்து, 40 அடியில் இருந்து, 700 அடிக்கு கீழ் சென்றுள்ளது.கடும் வறட்சியால் அமராவதி ஆற்றில் நீரோட்டம் தடைப்பட்டு, தாராபுரம் நகராட்சியில் குடிநீர் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. 30 வார்டுகளில், 60க்கு மேற்பட்ட இடங்களில் ஆழ்குழாய் கிணறு, மின் மோட்டார், சின்டெக்ஸ் தொட்டி மூலம் மக்களின் இதர உபயோகத்துக்கு தண்ணீர் வழங்குகின்றனர். அமராவதி அணையில் போதிய நீரின்றி, குடிநீருக்காக தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

குடிநீர் வடிகால் வாரியம் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தை, 25 கோடி மதிப்பில் திட்டம் தயாரித்தது. கொடுமுடியில் இருந்து வழியோர கிராமங்களுக்கும் தண்ணீர் வழங்கி, குழாய் மூலம் தாராபுரம் செல்ல திட்டமிட்டனர். 2003ல் இத்திட்டம் பயன்பாட்டுக்கு வந்து, தாராபுரம் நகராட்சிக்கு தினமும், 40 லட்சம் லிட்டர் தண்ணீர் திறக்க ஒப்பந்தமானது. ஒப்பந்தப்படி இதுவரை தண்ணீர் வழங்கவில்லை.அமராவதி ஆற்றில் தடுப்பணை அமைக்க வேண்டுமென நகராட்சி கூட்டத்தில் மூன்று முறை தீர்மானம் நிறைவேற்றி தமிழக முதல்வர், பொதுப்பணித்துறை

அமைச்சருக்கு அனுப்பினர். தலைமை நீரேற்று நிலையத்தில் எட்டு ஆழ்குழாய் கிணறுகள், 700 முதல், ஆயிரத்து, 500 அடி வரை ஆழம் வரை அமைத்தும் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம், ஐந்து லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. தாராபுரம் நகராட்சியின் குடிநீர் பிரச்னைக்கு திருமூர்த்தி அணையில் இருந்து குழாய் மூலம் குடிநீர் கொண்டு வந்தால் மட்டுமே நிரந்தர தீர்வாகுமென நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றினர். இந்நிலையில் தொடர் நீரோட்டம் இல்லாத அமராவதி ஆற்றின் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து, 14 கோடி மதிப்பில் குடிநீர் திட்டம் வரையறுக்கப்பட்டு தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை திருமூர்த்தி அணையில் இருந்து குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு வர பயன்படுத்தினால், பொது மக்களின் குடிநீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வாக இருக்குமென பொறியியல் வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இத்திட்டமும் நீரில்லாத கிணற்றில் தண்ணீர் எடுக்கும் முயற்சியாகுமென மக்கள் கருதுகின்றனர்.

13th 2012 Sep A.M

## கூட்டுறவு சங்கங்களில் உரம் வாங்கும்சிறு விவசாயிகள் அலைக்கழிப்பு

கம்பம்:தொடக்க கூட்டுறவு விவசாய வங்கிகளில், விவசாயிகள் உரம் வாங்க செல்லும் போது, அதிகாரிகள் கேட்கும் ஆவணங்களை சேகரித்து தர முடியாமல்,விவசாயிகள் அவதிப்படுகின்றனர். முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் இப்போது 119 அடியாக உயர்ந்துள்ளதால், விவசாயிகள் அனைவரும் முதல் போக சாகுபடிக்கான பணிகளை துவக்கியுள்ளனர். பல விவசாயிகள் ஒரு மாதத்திற்கு முன்பே நடவு பணிகளை முடித்துவிட்டனர்.இதனால் விவசாயிகளுக்கு யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள் தேவைப்படுகிறது. கடைகளில் உரங்கள் கிடைக்கவில்லை. வழக்கம் போல தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளில் யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள் விற்பனைக்கு வைத்துள்ளனர். உரங்கள் கேட்கப்போகும் "பெரிய' விவசாயிகளுக்கு பிரச்னை இல்லை. அவர்கள் ஆவணங்கள் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் உரங்கள் வழங்கப்படும். சிறிய விவசாயிகள் சென்று, கேட்டால், சிட்டா அடங்கங்கல், பட்டா, பத்திரம் ஜெராக்ஸ் என பல ஆவணங்களை கேட்கின்றனர். ஒத்தி வாங்கியிருந்தாலும், அந்த பத்திரங்களின் ஜெராக்ஸ் தரும்படி வலியுறுத்துகின்றனர். பொதுவாக கிராமங்களில் வாய்மொழியாக பேசி, வயல்களை உழவு செய்வார்கள். அவ்வாறு செய்யும் விவசாயிகளுக்கு ஆவணங்கள் வழங்க முடியாது. சொசைட்டிகளில் ஆவணங்கள் இல்லாமல் உரம் வழங்க மறுக்கின்றனர்.இதனால் பெரும்பாலான விவசாயிகள், கூட்டுறவு சங்கங்களில் உரம் வாங்குவதை தவிர்க்கின்றனர். கூட்டுறவு சங்க அதிகாரிகளோ இதை பயன்படுத்தி உரங்களை வேண்டியவர்களுக்கு தாராளமாக "வழங்கி' வருகின்றனர்.

## 13th 2012 Sep A.M — 101 தீர்மானங்கள் நிறைவேற்றம்

பொள்ளாச்சி : பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் நடந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில், 101 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சிறு, குறு விவசாயிகள் நிலங்களில், நிலமேம்பாட்டு பணிகள் முக்கிய தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தில், செயல்

படுத்தும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில், நிலமேம்பாட்டு பணிகளை இணைத்து மாநில அரசு உத்தரவிட்டது. இத்திட்டத்தில், பணிகள் மேற்கொள்ள வேளாண்மை துறை சார்பில் சிறு, குறு விவசாயிகள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டது.

இந்த பட்டியலை ஊராட்சிகளில், சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தி, ஒப்புதல் பெற அறிவிக்கப்பட்டது. இதையொட்டி, அனைத்து ஊராட்சிகளிலும் நேற்று சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது.

பொள்ளாச்சி தாலுகாவில், வடக்கு, தெற்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு ஆகிய நான்கு ஒன்றியங்களுக்குட்பட்ட 118 ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் நடந்தது. இவற்றில், நிலமேம்பாட்டுக்கான விவசாயிகள் பட்டியலும், கோமாரி நோய் தடுப்பூசி குறித்தும், 19வது கால்நடை கணக்கெடுப்பு பணி குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகளும், வேளாண் துறை அதிகாரிகளும்

பங்கேற்றனர்.

வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட 39 ஊராட்சிகளில் நடந்த கிராம சபை கூட்டத்தில், இரண்டாயிரத்து 299 ஆண்கள், இரண்டாயிரத்து 744 பெண்கள் சேர்த்து ஐந்தாயிரத்து 43 பேர் பங்கேற்றனர். மொத்தம் 101 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நல்லூத்துக்குளி, ராசிசெட்டிபாளையம், அய்யம்பாளையம் ஊராட்சிகளில் நடந்த கூட்டங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீதரும், ஆர். பொன்னாபுரம், குள்ளிசெட்டிபாளையம், வடக்கிபாளையம் ஊராட்சிகளில் நடந்த கூட்டங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) சீனிவாசனும் பார்வையிட்டனர்.

## 12th 2012 Sep A.M — பால் பொருள் பதப்படுத்த ஒரு மாத இலவச பயிற்சி

சென்னை:பால் பொருட்கள் பதப்படுத்துதல், மீன் பொருட்கள் தயாரித்தல் குறித்த, இலவசப் பயிற்சியில் சேர விரும்புவோர், 20ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என, அறிவிக்கப்பட்டுள்ளது.சென்னை, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர்

தியாகராஜன் வெளியிட்டுள்ள அறிவிப்பு:
சென்னையில் உள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில், அக்., 1 முதல், அக்., 31ம் தேதி வரை, ஒரு மாதத்திற்கு, பால் பதப்படுத்துதல் தொடர்பாக இலவசப் பயிற்சி அளிக்க உள்ளது.பால் உற்பத்தியாளர்கள், பால் பதப்படுத்தும் தொழில் ஆர்வமுள்ளோர், வரும், 20ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். 25ம் தேதி, விண்ணப்பித்தோரில், 30 பேர் தேர்வு செய்யப்படுவர். விவரம் தேவைப்படுவோர், முதல்வர், உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கொடுவள்ளி, அலமாதி அஞ்சல், செங்குன்றம், சென்னை - 52 என்ற முகவரியிலும், 2768 0214, 2768 0217 என்ற தொலைபேசியிலும், 94448 10657 என்ற அலைபேசியிலும் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

12th 2012 Sep A.M

**தண்ணீர் குறைவால் நெல் விவசாயம் பாதிக்கும் சூழல்**

கூடலூர் : கூடலூர் வயல்களில் போதிய தண்ணீர் இன்றி நெல் விவசாயம் பாதிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.
கூடலூர் பகுதியில் இந்த ஆண்டு பருவ மழை குறித்த காலத்தில் பெய்யவில்லை. தாமதமாக பெய்த போது, அதில் கிடைத்த தண்ணீரை பயன்படுத்தி விவசாயிகள் வயல்களில் நெல் நடவு செய்தனர். கடந்த வாரம் சில நாட்களாக மழை பெய்தாலும் தண்ணீர் வயல்களில் நிற்கவில்லை. கடந்த இரண்டு நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பல பகுதிகளில் உள்ள வயல்கள் வறண்டு, நெல் விளைச்சல் பாதிக்கும் சூழல் உருவாகி வருகிறது. இதனை தவிர்க்க,"விவசாயத்துக்கு பயன்படும் நீர் நிலைகளில் சிறிய தடுப்பணைகள் அமைத்து நெல் விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் வசதி ஏற்படுத்தி தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என சிறு விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

12.09.2012 P.M

13.09.2012 A.M

## இன்றைய வேளாண் செய்திகள்

13th 2012 Sep | விவசாயிகள் வாழ்வை வளமாக்கும் செம்மை கரும்பு சாகுபடி



திருவள்ளூர்: கரும்பு விளைச்சலை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கவும் செம்மை கரும்பு சாகுபடி முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

செம்மை கரும்பு சாகுபடியானது கரும்பு சாகுபடியில் புதிய அணுகுமுறை மற்றும் நீர்சேமிப்பு வழிகளில் புதிய முயற்சியாகும். இதில் விளைச்சலை அதிகப்படுத்தும் உத்தியோடு தண்ணீர்

சேமிப்பு குறித்தும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி அதிகரிப்பதோடு நீர் நிலை ஆதாரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கும் உறுதுணையாய் இவை இருக்கும்.

இதுகுறித்து திரூர் வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் மு.தேவநாதன், பேராசிரியை ம.நிர்மலாதேவி ஆகியோர் கூறியது:

செம்மை கரும்பு சாகுபடியானது குறைந்த அளவு விதை நாற்றுகள் மற்றும் குறைந்த அளவு தண்ணீரை உபயோகிப்பது, சரியான அளவு ஊட்டச்சத்து, பயிர் பராமரிப்பின் மூலம் அதிக மகசூல் பெற வழிவகை செய்யும் ஒரு முறையாகும்.

முக்கிய கோட்பாடுகள்: ஒரு விதைப்பரு சீவல்களில் இருந்து நாற்றங்கால் அமைத்தல், இளம் (25-35 நாள்கள் வயதான) நாற்றுக்களை நடவு செய்தல், வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளியும், நாற்றுக்கு நாற்று 2 அடி இடைவெளியும் பராமரித்தல், சொட்டுநீர்ப்பாசனத்தின் கீழ் உரமிடுதல், இயற்கை சார்ந்த உரங்கள், பயிர்பாதுகாப்பு, மற்றும் பராமரிப்பு முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல், ஊடு பயிரிட்டு மண் வளம் மற்றும் மகசூல் அதிகரிக்க வழி செய்தல்.

சாகுபடியின் பயன்கள்: தண்ணீர் உபயோகிப்பு திறன் கூடுகிறது, சரியான அளவு உரங்களை உபயோகிப்பதின் மூலம் பயிர்களுக்கு ஊட்டச்சத்து பராமரிப்பு அமைக்கிறது, காற்று மற்றும் சூரிய ஒளி அதிகளவு பயிர்களுக்கு கிடைக்கிறது, அதனால் கரும்பில் சர்க்கரை கட்டுமானம் அதிகரிக்கிறது, மொத்த சாகுபடி செலவு குறைகிறது, ஊடுபயிர் மூலம் இரட்டை வருவாயுடன் மகசூலும் அதிகரிக்கிறது

நாற்று தயார் செய்ய கடைப்பிடிக்க வேண்டியவை: 6 மாத வயதுள்ள உயர் விளைச்சல் தரும் ரகங்களில் இருந்து மொட்டுக்களை சேகரிக்க வேண்டும், விதை மொட்டுக்களின் முளைப்புத் திறனை தூண்டும் வகையில் 1 கிலோ யூரியா 50 கிராம் கார்பென்டாசிம் 200 மி.லி மாலத்தியான் 100 லி. நீரில் கலக்க வேண்டும். அதில் 5000 மொட்டுக்களை நன்கு நனையும்படி 15 நிமிடம் ஊறவைத்து பின் நிழலில் உலர வைக்க வேண்டும்.

ரசாயனமுறை தவிர்த்து உயிரியல் முறையிலும் விதை நேர்த்தி செய்யலாம், இதற்கு டிரைக்கோ டெர்மா விரிடி 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து பின்விதை மொட்டுக்களை 15 நிமிடம் ஊற வைத்து பின் நிழலில் 15 நிமிடம் உலர வைக்கலாம்.

விதை நேர்த்தி செய்ய விதை மொட்டுக்களை கோணிப்பையில் இறுக கட்டி நிழலில் அடுக்கி வைக்க வேண்டும். இவற்றை காற்று புகா வண்ணம் நன்கு மூடி இருக்குமாறு பார்க்க வேண்டும். நன்கு மூடிய கோணிப்பைகளின் மீது பாரம் ஏற்றி 5 நாள்கள் அப்படியே இருத்தல் வேண்டும். இடையில் தண்ணீர் தெளிக்கத் தேவையில்லை.

முதலில் குழி தட்டுக்களின் பாதியளவில் கோகோபீட் கொண்டு நிரப்ப வேண்டும். பின் விதை மொட்டுக்களை மேல் நோக்கி இருக்குமாறு சற்று சாய்வாக அடுக்கி மீதி குழிகளை கோகோ பீட் கொண்டு நிரப்ப வேண்டும்.

குழி தட்டுக்களை வரிசையாக தண்ணீர் தெளிக்க வசதியாக வைக்க வேண்டும். தினசரி தண்ணீர் தெளிப்பது அவசியம். 1 ஏக்கருக்கு 300 சதுர அடி தேவை நிழல்வலை அல்லது மர நிழலிலோ நாற்றுக்கள் வைக்க வேண்டும்.

நடவு செய்தல் மற்றும் இதர பராமரிப்புகள்: நாற்றுக்களை 5-2 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நட்ட 10, 20-வது நாள் சிறிதளவில் மேலும் இட்டு மண் அணைக்க வேண்டும். (யூரியா அல்லது அம்மோனியம் சல்பேட்) பிறகு களை எடுத்தல், மண் அணைத்தல், உரம், தண்ணீர் நிர்வாகம் போன்ற பராமரிப்பு வேலைகளையும் முறையாக செய்ய வேண்டும். 15-க்கு மேற்பட்ட தூர்கள் 2 மாதத்துக்குள் உருவாகும்.

2 அல்லது 3 தூர்கள் வந்தவுடன் முதலில் வந்த தாய்ச்செடியை வெட்டி நீக்க வேண்டும். அவ்வாறு நீக்கினால் அதிக பக்க தூர்கள் வெளிவரும் மற்றும் அனைத்து பயிர்களும் ஒரே சமயத்தில் கரும்பாக மாறும்.

செம்மை கரும்பு சாகுபடியில் அதிக இடைவெளியில் இருப்பதால் ஊடு பயிராக காய்கறிகள், பயறுவகைகள், வெள்ளரி, தர்பூசணி, பசுந்தாள் உர பயிர்களை பயிர் செய்ய முடிகிறது. மேலும் ஊடுபயிர் செய்வதால் அதிக லாபம், களை கட்டுப்பாடு, மண் வளம் பெருக்க முடியும்.

மண் அணைத்தல், சோகை உரித்தல்: நடவு செய்த 45- வது நாள் மற்றும் 90-வது நாள் மண் அணைப்பு செய்ய வேண்டும், ஒளிச்சேர்க்கைக்கு மேற்புறமுள்ள 8-10 இலைகளே தேவைப்படுகின்றன. எனவே கீழ்புறமுள்ள காய்ந்த மற்றும் சில காயாத இலைகளை 5 மற்றும் 7-வது மாதத்தில் உரித்து பார் இடைவெளியில் இட வேண்டும்.

சோகை உரிப்பு பயன்கள்: சுத்தமான பயிர் பராமரிப்பு, பயிர்களுக்குகிடையே காற்றோட்டம் அதிகரிப்பு, பூச்சி தாக்குதல் குறைவு, மற்ற பயிர் பராமரிப்பு பணிகள் எளிதாகின்றன.

சொட்டுநீர் உரப்பாசனம்:செம்மை கரும்பு சாகுபடியின் மகசூல் அதிகரிக்க சொட்டுநீர் உரப்பாசனம் சாலச்சிறந்தது. மண்ணின் தன்மைக்கேற்ப நாள்தோறும் அல்லது அதிகபட்சமாக 3 நாள்களுக்கு ஒருமுறை சொட்டு நீர்பாசனம் அளிக்கலாம். 10 நாள்களுக்கு ஒருமுறை உரப்பாசனம் செய்ய வேண்டும். இவ்வகையில் 45 சதவீதம் பாசன நீரை (1200 மி.மீ) சேமிக்க இயலும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து தொழில்நுட்பங்களையும் முறையாகக் கடைப்பிடித்தால் ஒரு மொட்டில் இருந்து குறைந்தது 30 கிலோ கரும்பு கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஒரு ஏக்கருக்கு 5000 மொட்டுக்கள் என கணக்கிடும்போது 150 டன் மகசூல் பெற முடியும்.

மேலும் விவரங்களுக்கு திரூர் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம்.

## காய்கறி பயிர்களுக்கான நாற்றங்காலை பராமரிப்பது எப்படி?

புதுச்சேரி: காய்கறி பயிர்களைப் பயிரிடும்போது நாற்றங்காலை முறையாக பராமரிப்பதன் மூலம் அவற்றை பூச்சி தாக்குதல்களில் இருந்து கட்டுப்படுத்த முடியும்.

விவசாயிகள் விளைவிக்கும் காய்கறிகள் பசுமையாகவும், தரமாகவும் இருக்க வேண்டும்.

இதற்கு ரசாயனத் தன்மையுள்ள உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

அதற்கு பதிலாக, அங்கக உரங்களையும், உயிரக பூச்சிக் கொல்லிகளையும், தாவர பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்தி காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய கற்றுக்கொள்வது விவசாயிகளுக்கு அவசியமானதாகும்.

"ஆடிப் பட்டம் தேடி விதை' என்ற பழமொழிக்கு ஏற்ப விவசாயிகள் ஆடி மாதத்தில் காய்கறி விதைகளை விதைத்து வருகின்றனர்.

தற்போது நாற்றங்கால் நிலையில் உள்ள காய்கறி பயிர்களை பூச்சி மற்றும் நோய்களில் இருந்து காக்கும் முறைகள் பற்றியும், மகசூலை அதிகரிக்க வேர் வளர்ச்சியின் அவசியத்தையும் விவசாயிகள் அறிந்து வைத்திருப்பது நல்லது.

இது குறித்து புதுச்சேரி காமராஜர் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் வல்லுநர் நி.விஜயகுமார் கூறியது:

காய்கறி பயிர்களில் கத்தரி, மிளகாய், தக்காளி போன்றவற்றை நாற்று விட்டும், வெண்டை, அவரை மற்றும் கீரை வகைகளை விதை விதைத்தும் பயிர் செய்யப்படுகிறது.

கத்தரி, மிளகாய், தக்காளி போன்ற காய்கறி பயிர்களை சாதாரணமாக மண்ணில் நாற்றுவிட்டு நாற்றங்காலை பராமரிக்கலாம்.

அவ்வாறு பராமரிக்கும்போது ஒரு சதுர மீட்டர் நாற்றங்கால் பரப்பளவுக்கு 10 கிலோ தொழு உரம், 50 கிராம் வேப்பம் புண்ணாக்கு, 5 கிராம் "அசோஸ்பைரில்லம்', 5 கிராம் பாஸ்போ பாக்டீரியா மற்றும் வேம் என்று சொல்லக்கூடிய "மைக்கொரைசா' என்ற பூஞ்சாணத்தையும் இட்டு நாற்றங்காலை பராமரிக்கலாம்.

இதனால், நாற்றங்காலில் உள் பயிரின் வேர் வளர்ச்சி நன்கு தூண்டுவதோடு மட்டுமன்றி வேரில் தோன்றக் கூடிய வேர் பூச்சிகள், வேர் அழுகல் நோய்களும் கட்டுப்படும்.

விதைத்த 20 நாள்களுக்குள் நாற்றங்காலில் ஒரு சதுர மீட்டர் பரப்பளவுக்கு ஒரு கிலோ டிரைக்கோடெர்மா என்ற நன்மை தரும் பூஞ்சாணத்தை 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் வேர்பகுதிகளில் இடுவதால் "பித்தியம்' என்ற வேர் அழுகல் நோய் வராமல் தடுக்கப்படுகிறது.

நாற்றங்காலில் தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்துக் கொள்வது மிக அவசியமானது. தண்ணீரை பூ வாளி மூலம் நாற்றங்கால் மீது தெளிப்பது சிறந்தது.

நாற்றங்காலின் வளர்ச்சிக்கு ஒரு சதுர மீட்டர் பரப்பளவுக்கு சூப்பர் பாஸ்பேட் 100 கிராம் மற்றும் கார்போபியூரான் மூன்று சத குருனை மருந்தினை 10 கிராம் என்ற அளவில் இடுவதால் வேரில் நூற்புழுக்களின் தாக்குதலை தவிர்க்கலாம்.

குழித்தட்டு முறை: நாற்றங்காலை குழித்தட்டு முறையிலும் உருவாக்கலாம். இந்த முறையில் அனைத்து நாற்றுக்களும் நோய் மற்றும் பூச்சிகளின் தாக்குதலில் இருந்து எதிர்ப்புத் தன்மையோடு காணப்படும்.

ஒரு குழித்தட்டில் 98 குழிகள் இருக்கும். இந்த குழித்தட்டானது பிளாஸ்டிக்கால் ஆனது. இதை எளிதில் மக்கச் செய்ய முடியும். மேலும் குழித்தட்டு நாற்றங்காலை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எளிதாக எடுத்துச் செல்ல முடியும்.

குழித்தட்டு நாற்றங்காலை நிழல் வலைகளில் தேவையான வெப்பநிலைகளில் சீராக நீர் தெளிப்பு முறையின் மூலம் அதிக அளவில் ஆரோக்கியமாக உருவாக்கலாம்.

ஒவ்வொறு குழித்தட்டிலும் நன்கு சலித்த மண் இரண்டு பங்கு, கம்போஸ்ட் உரம் ஒரு பங்கு, தேங்காய் நார் கழிவு உரம் ஒரு பங்கு ஆகியவற்றை கலந்து இட வேண்டும்.

இவைகளுடன் ஒரு கிலோ டிரைக்கோடெர்மா என்ற உயிரக பூஞ்சாண மருந்தையும் சேர்க்க வேண்டும்.

அங்கக உரங்களில் தேங்காய் நார் கழிவு உரம் காய்கறி நாற்றங்கால் பராமரிப்புக்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில், மற்ற அங்கக உரங்களை ஒப்பிடும்போது தேங்காய் நார் கழிவு உரத்தில் அதிக அளவில் கரிம சத்து உள்ளது. தேங்காய் நார் கழிவு உரம் கிடைக்காத தருணத்தில் மண்புழு உரம் அல்லது தொழு உரம் அல்லது சர்க்கரை ஆலை கழிவு உரம் போன்றவற்றை பயன்படுத்தலாம் என்றார் அவர்.

## 13th 2012 Sep A.M — இன்று இடியுடன் மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, செப். 12: தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. தமிழகம், புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பிருக்கிறது. புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி, சேலத்தில் 4 செ.மீ, பொன்னேரியில் 2 செ.மீ. மழைபெய்துள்ளது.



| 13th 2012 Sep A.M | மேற்கு வங்கத்திலிருந்து அரிசி ரகங்கள் கொள்முதல்: ஜெயலலிதா |
|---|---|



சென்னை, செப். 12: தமிழகத்தில் வெளிச் சந்தையில் விற்கப்படும் சன்ன ரக அரிசியின் விலை உயர்ந்து வருவதால், விலை உயர்வைக் கட்டுப்படுத்த மேற்கு வங்கத்திலிருந்து அரிசி ரகங்களை கொள்முதல் செய்ய முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

"தமிழகத்தின் பொன்னி அரிசிக்கு இணையான சொர்ணா, ஐ.ஆர். 36 மற்றும் ஐ.ஆர். 50-க்கு இணையான உயர் சன்ன ரகமான "மினிகிட்' ஆகியவை மேற்கு வங்க மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு அமுதம் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

ஒரு கிலோ சொர்ணா, ஐ.ஆர்.36 ஆகியவை அடக்க விலையான ரூ.25-க்கும், ஒரு கிலோ "மினிகிட்' அரிசி அடக்க விலையான ரூ.31-க்கும் விற்பனை செய்யப்படும்.

ஆந்திரத்தில் அரிசி கிடைக்காததால்தான் மேற்கு வங்க மாநிலத்திலிருந்து அரிசி ரகங்கள் கொள்முதல் செய்யும் முடிவு எடுக்கப்பட்டது' என்று உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

| 13th 2012 Sep A.M | ரேஷன் பொருள்கள் மலிவு விலையில் தொடர ரூ.907 கோடி: ஜெயலலிதா |
|---|---|



சென்னை, செப். 12: ரேஷன் கடைகளில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் போன்றவற்றை தொடர்ந்து மலிவு விலையில் வழங்க ரூ.907 கோடியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

மத்திய அரசின் மானியம் கிடைக்காத போதிலும்கூட, ரேஷன் பொருள்களை மலிவு விலையில் தொடர்ந்து மேலும் 6 மாதங்களுக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்துதல், ரேஷன் பொருள்களை மலிவு விலையில் தொடர்ந்து வழங்குதல் ஆகியவை குறித்து முதல்வர் ஜெயலலிதா தலைமையில் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை:

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் என்பது பெரும்பாலும் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளையே சார்ந்துள்ளது என்றாலும் தமிழகத்தில் விலைவாசியைக் குறைக்கும் நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருகிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கும்போது, அவற்றை அமுதம் அங்காடிகள், கூட்டுறவு பண்டகச் சாலைகள் மூலம் நுகர்வோர்களுக்கு அடக்க விலையில் விற்பனை செய்ய ரூ.50 கோடியில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் உருவாக்கப்பட்டது.

மிளகாய், புளி ஆகியவற்றின் விலை அதிகமாக இருந்தபோது, இந்த நிதியம் மூலம் அடக்க விலையில் விற்பனை செய்யப்பட்டதால் வெளிச் சந்தையில் அவற்றின் விலை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. காவிரியில் இருந்து தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை கர்நாடகம் திறந்துவிடாததால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சன்ன ரக அரிசியின் விலை உயர்ந்துள்ளது.

மானியத்தை நிறுத்தியும்கூட....: சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ரேஷன் கடைகள் மூலம் மாதம் ஒன்றுக்கு 14,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதில், சுமார் 2,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பினை கிலோ ரூ.55 விலையில் மத்திய அரசு வழங்கி வந்தது. அதனை குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ரூ.30-க்கு தமிழக அரசு வழங்கி வருகிறது. இந்த குறைந்த மானியத்தையும் மத்திய அரசு 30-6-2012 உடன் நிறுத்தி விட்டது.

இது தவிர, கிலோ ரூ.30 விலையில் 10,000 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக மத்திய அரசு மானியம் வழங்கவில்லை. லிட்டர் ரூ.52.65-க்கு மத்திய அரசு வழங்கும் பாமாயிலை தமிழக அரசு ரூ.25-க்கு வழங்கி வருகிறது.

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் விலைவாசி உயர்ந்துள்ளதை கணக்கில் கொண்டு தற்போது ரேஷன் கடைகளில் மலிவு விலையில் வழங்கப்பட்டு வரும் துவரம்

பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவை மேலும் 6 மாதங்களுக்கு அதாவது 1-10-2012 முதல் 31-3-2013 வரை வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.907 கோடியே 8 லட்சம் செலவு ஏற்படும். இதன் மூலம் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை வெளிச் சந்தையில் கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்

| 12th 2012 Sep A.M | "சிறு, குறு விவசாயிகள் குறித்த கணக்கெடுப்பு அவசியம் |
|---|---|

குளித்தலை, செப். 11: திட்டப் பயன்களை அளிப்பதற்கு ஏதுவாக, கரூர் மாவட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகள் குறித்த முறையான கணக்கெடுப்பை மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் பணி புரிவோரை விவசாயத்துக்கும் நில மேம்பாட்டுக்கும் பயன்படுத்துவது தொடர்பாக விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டம் குளித்தலையில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஆட்சியர் வெ. ஷோபானா தலைமை வகித்தார். குளித்தலை எம்எல்ஏ அ. பாப்பாசுந்தரம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டி.ஜி. வினய், வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன், குளித்தலை கோட்டாட்சியர் க. சிவசௌந்தரவள்ளி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கலந்துரையாடலில் விவசாயிகள் பேசியது:

சொட்டுநீர் பாசன திட்டத்தில் அனைத்துத் தரப்பு விவசாயிகளுக்கும் 100 சத மானியம் வழங்க வேண்டும். வேலை உறுதித் திட்ட பணியாளர்களை விவசாயத்துக்கு பயன்படுத்தும்போது, அவர்களுக்கு வழங்க வேண்டிய கூலி விவரம் குறித்து தெரியப்படுத்த வேண்டும். அந்த கூலியை ஊராட்சி நிர்வாகம் வழங்குமா, அல்லது நில உரிமையாளர் வழங்க வேண்டுமா என்பது குறித்து தெரிவிக்க வேண்டும்.

ஒருபகுதியில் உள்ள விவசாயிகள் தங்களுக்கு பணியாளர்கள் தேவைப்படும் பட்சத்தில், தேவையான நபர்கள் குறித்து ஊராட்சி அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும், பதிவு மூப்பின் அடிப்படையில் பணியாளர்களை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கருத்துகளை விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆட்சியர் வெ. ஷோபனா பேசியது: வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரிவோரை, விவசாயத்துக்கும் மட்டும் பயன்படுத்தாமல் நிலத்தை மேம்படுத்தவும், பண்ணைக் குட்டை அமைக்கவும் பயன்படுத்தலாம். புதன்கிழமை நடைபெறவுள்ள கிராமசபைக் கூட்டத்தில் தனி பதிவேடு தயாரித்து, அதில் ஒவ்வொருவரின் தேவைகள் குறித்து மிக சுருக்கமாக பதிவு செய்ய வேண்டும்.

மேலும், பட்டா மாறுதல் கோருபவர்களின் முழு விவரங்கள் இங்கு பதியப்பட வேண்டும். பதிவேட்டில் பதிந்தால் உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். இதை அனைத்து ஊராட்சித் தலைவர்கள் மற்றும் செயலர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

இதையடுத்து, வேளாண்துறை சார்பில் 5 பேருக்கு தண்ணீர் தெளிக்கும் கருவி, 8 பேருக்கு கைத்தெளிப்பான் கருவி, மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை சார்பில் 12 சுயஉதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 20 ஆயிரம், தோட்டக் கலைத் துறை சார்பில் 5 பேருக்கு 100 சத மானியத்தில் சொட்டுநீர் பாசன முறையை அமைப்பதற்கான ஆணை வழங்கப்பட்டது.

| 12th 2012 Sep A.M | அதிகாரிகள் உத்தரவாதத்தால் விவசாயிகள் மறியல் திட்டம் வாபஸ் |
|---|---|

பொறையாறு,செப்.11:மயிலாடுதுறை பொதுப்பணித்துறை நிர்வாகத்தைக் கண்டித்தும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் தில்லையாடி பாசனதாரர்கள் சங்கத்தின் சார்பில் திருக்கடையூரில் செவ்வாய்க்கிழமை சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தரங்கம்பாடி வட்டாட்சியர் வெ. ராமகிருஷ்ணன் தலைமையில் திங்கள்கிழமை மாலை வட்டாட்சியர் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் செம்பனார்கோயில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் பாசனதாரர்கள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சுமார் 10 ஆண்டுகளாக தண்ணீர் வடியாமல் தூர்ந்து கிடக்கும் அராபி வடிகால் ஆறு,இடிந்த நிலையில் உள்ள பூச்சாத்தனூர் மதகு ஆகியவை ஒரு மாத காலத்திற்குள் சீர் செய்யப்படும். திருவிடைக்கழி மகிமலை ஆறு நீர்ஒழுங்கி கீழ்மதகு,தெற்கு வெளி பாசன மதகு,உபரி ஆறு வடிகால் மதகு ஆகியவை வரும் நிதியாண்டில் சீர் செய்து தரப்படும்.

தில்லையாடி ஆற்றங்கரை பாலம் அருகாமையில் உடைந்துள்ள கரை வடகிழக்கு பருவ மழைக்கு முன் மணல் மூட்டைகள் மூலம் பலப்படுத்தித் தரப்படும் என்று அதிகாரிகள் எழுத்து மூலமாக உறுதியளித்தனர்.

இதனால் விவசாயிகளின் சாலை மறியல் போராட்ட முடிவு கைவிடப்பட்டது.

| 12th 2012 Sep A.M | செப். 15 முதல் கால்நடை நோய்த் தடுப்பூசி முகாம் |
|---|---|

பெரம்பலூர், செப். 11: பெரம்பலூர் மாவட்டத்தில், கால்நடைகளுக்கு கால், வாய் நோய்த் தடுப்பூசித் திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளத் துறை சார்பில் செப். 5 முதல் 3-ம் கட்டமாக தடுப்பூசி முகாம்கள் நடைபெறுகின்றன.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது, 3-ம் கட்டமாக 1 லட்சத்து 31 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசிப் போடப்படவுள்ளது. இத்தடுப்பூசி மூன்று மாதத்திற்கு மேற்பட்ட கன்றுகள், பசு, எருது, காளை மற்றும் எருமையின கால்நடைகளுக்கு போடப்பட உள்ளது. தடுப்பூசி மருந்தைப் பாதுகாப்பதற்காக பெரம்பலூர் மாவட்டத்தில் பேரளி கால்நடை மருந்தக வளாகத்தில் சிறப்பு குளிரூட்டும் பெட்டி அமைக்கப்பட்டு, பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிப் பணி செப். 15-ல் வேப்பந்தட்டை ஒன்றியம், பிள்ளையார்பாளையம், முகமதுபட்டினம், பெரம்பலூர் ஒன்றியம், கவுல்பாளையம், வேப்பூர் ஒன்றியம் பொன்னகரம், ஆலத்தூர் ஒன்றியம் தேனூர், தொட்டியப்பட்டி ஆகிய கிராமங்களில் தொடங்கப்பட்டு, அக். 4 வரை அனைத்துக் கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிப் பகுதிகளில் நடைபெறவுள்ளது.

நோய் பாதிப்புகளிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க, தடுப்பூசி போட்டு பயனடையலாம்.

13.09.2012 A.M

# இன்றைய வேளாண் செய்திகள்

13th 2012 Sep A.M

## சத்தி வேளா மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.15 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

சத்தியமங்கலம், செ .13–

சத்தியமங்கலம் வேளா மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ரூ.15 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது.

பருத்தி ஏலம்

சத்தியமங்கலம் வேளா மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை பருத்தி ஏலம் நடைபெறும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு அரிய பம்பாளையம், செ பகபுதூர், மாரனூர், வி ண பள்ளி, அரசூர், மாக்கினாங்கோம்பை, சிக்கரசம்பாளையம், ராமபையனூர் உள்பட 40 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொ டுவந்திருந்தார்கள். மொத்தம் 1,200 மூட்டைகள் பருத்தி விற்பனைக்கு கொ டுவர பட்டு இருந்தது.

ரூ.15 லட்சத்துக்கு...

இதில் பிரம்மா ரக பருத்தி ஒரு குவி டால் 4 ஆயிரத்து 600 ரூபாய் முதல் 4 ஆயிரத்து 900 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது. ஏலத்தில் திரு பூர், கோவை, அவினாசி, சத்தியமங்கலம் பகுதி வியாபாரிகள் கலந்து கொ டு பருத்தி மூட்டைகளை வாங்கி சென்றார்கள். ஏலத்திற்கான ஏற்பாடுகளை சங்கத்தின் தனி அதிகாரி இளங்கோ செய்திருந்தார்.

| 13th 2012 Sep A.M | தஞ்சையில்<br>இயற்கை வேளா மை ப ணை சான்று வழங்கும் மையம் நிறுவ நடவடிக்கை<br>ஐ.ஓ.பி. கடன் வழங்கும் விழாவில் மத்திய மந்திரி பழனிமாணிக்கம் பேச்சு |
|---|---|

தஞ்சையில் இயற்கை வேளா மை ப ணை சான்று வழங்கும் மையம் நிறுவ நடவடிக்கை எடுக்க படும் என்று ஐ.ஓ.பி.கடன் வழங்கும் விழாவில் மத்திய மந்திரி பழனிமாணிக்கம் கூறினார்.

முன்னுரிமை கடன்

தஞ்சை ம டல இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் முன்னுரிமை கடன் வழங்கும் விழா தஞ்சையில் நேற்று நடைபெற்றது. தஞ்சை ம டல முதன்மை மேலாளர் ரகுவத்சசாரி வரவேற்று பேசினார். சென்னை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி செயல் இயக்குனர் பன்சல் முன்னிலை வகித்தார்.

விழாவில் மத்திய மந்திரி பழனிமாணிக்கம் கலந்து கொ டு கடன் வழங்கி பேசினார். அ போது அவர் பேசியதாவது:–

இந்தியாவில் தென்பகுதியில் தொடங்கிய வங்கிகளுள் முதல் வங்கி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. மேலும் அயல்நாடுகளில் வர்த்தகத்தை தொடங்கிய முதல் வங்கி ம் இந்த வங்கி தான். உலகில் அணை கட்டி விவசாயம் செய்யலாம் என பெருமையை ஏற்படுத்தியது தமிழகம். அதுவும் தஞ்சை மாவட்டத்தில் கரிகாற்சோழன் கட்டிய கல்லணை தான். சோழர் காலத்துக்கு பிறகு
சிங்க பூர், பர்மா, தென்ஆ பிரிக்கா போன்ற நாடுகளில் வர்த்தகத்தை தொடங்கியது.

கல்விக்கடன்

ஐக்கிய முற்போக்கு அரசு தான் கல்விக்கடனை அறிமுகம் செய்தது. மேலும் விவசாயிகளுக்கான கடன் கொள்கை தஞ்சையில் தான் முதலில் அறிமுக படுத்தியது. இந்தியாவில் கடந்த 2004–ம் ஆ டு 85 ஆயிரம் கோடி விவசாயிகளுக்கு கடன் வழங்க பட்டது. இது தற்போது 6 லட்சம் கோடியாக அதிகரித்து உள்ளது. தமிழகத்தில் கணிசமான அளவு கடன் வழங்க பட்டு உள்ளது. சிறு, குறு தொழில் தொடங்குவோர் குறைவாகவே உள்ளனர். எனவே சிறு, குறு தொழில் தொடங்க முன்வர வே டும்.

வங்கிகள் கடன் கொடு பதோடு மட்டும் அல்லாமல் புதிய வழிமுறைகள் குறித்து பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வே டும். உலகில் ரசாயன உரம், பூச்சி மருந்து பயன்படுத்தாத இயற்கை உரங்கள் மூலம் பயன்படுத்த பட்ட காய்கறி, பழங்கள், உணவுபொருட்களுக்குத்தான் விலை அதிகம். எனவே இது போன்ற பழங்கள், காய்கறிகள், உணவு பொருட்களை உற்பத்தி செய்ய வே டும். ரசாயன உரம், பூச்சி மருந்து பயன்படுத்தாத உணவு பொருட்கள் உற்பத்தி செய்வது குறித்த சான்று வாங்குவதற்கு பெங்களூர் செல்ல வே டி உள்ளது என சிலர் கூறினர்.

எனவே மத்திய மந்திரி சரத்பவாரை சந்தித்து தமிழகத்தின் மைய பகுதியான தஞ்சை அல்லது திருச்சியில் இயற்கை வேளா மை ப ணை சான்று வழங்கும் மையம் அமைக்க நடவடிக்கை எடுக்க படும். மேலும் விவசாயிகளை வேளா மை பல்கலைக்கழகத்திற்கு அழைத்து சென்று பயிற்சி கொடுக்கலாம். உற்பத்தி பொருட்களில் புதிய வழிமுறைகளை கொ டு வருவதன் மூலம் விவசாயிகளின் வருமானம் பெருகும். மாணவர்கள் கல்விக்கடனை பெற்று நாட்டுக்கு சிறந்த முறையில் திரு பி செலுத்த வே டும். ங்கள் செலுத்தும் பணம் இன்னொரு மாணவனின் கல்விக்கு உதவும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ரூ.81/2 கோடி கடன்

விழாவில் 454 விவசாயிகளுக்கு ரூ.5 கோடியே 74 லட்சமும், சிறு தொழில் கடனாக 76 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 68 லட்சமும், கல்விக்கடனாக 59 மாணவர்களுக்கு ரூ.1 கோடியே 10 லட்சமும் என மொத்தம் 589 பயனாளிகளுக்கு ரூ.8 கோடியே 52 லட்சத்து 92 ஆயிரம் கடனுதவியை மத்திய மந்திரி பழனிமாணிக்கம் வழங்கினார்.

விழாவில் பொது மேலாளர் மிஸ்ரா, மற்றும் வங்கி அதிகாரிகள் கலந்து கொ டனர். முடிவில் முதன்மை மேலாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.